**இரத்தினபுரி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| முத்திரைக் கட்டண வருமானக் கணக்கில் கடந்த ஆண்டுகளில் பில்லிடலிற்காக பெற வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 21,655,124 ஆன போதும், கடந்த ஆண்டுகளிற்காக மீளாய்வாண்டில் பெறுவனவு ரூபா 36,102,614 ஆனது. அதன் பிரகாம் ரூபா 14,447,490 ஆன குறை ஒதுக்கீட்டிற்காக செம்மையாக்கல் செய்யப்படாத காரணத்தால் திரண்ட நிதியத்தின் மீதி அப்பெறுமனத்தால் குறைத்து காட்டப்பட்டிநருந்தது. | 2020 பெறுவனவின் பிரகாரம் மேலும் ரூபா 14,447,490 ஆன பணத்திற்காக குறை ஒக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக என உண்மை தகவல்களை உறுதி செய்து கொண்டு எதிர்வரும் ஆண்டில் சரிசெய்வதாக. | கடந்த ஆண்டுகளிற்கான முத்திரைக் கட்டண வருமானம் குறை ஒக்கீட்டிற்காக செம்மையாக்கல் செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 8,358,478 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் துணை பதிவேடுகளை பேணிச் செல்ல தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் துணை பதிவேடுகளை இணக்கஞ் செய்து காணப்படும் வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கூட்டுத்தொகை ரூபா 489,918 ஆன 06 கணக்கு விடயங்கள் தொடர்பான விரிவான அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால் திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நீண்ட காலமாக நிலவிவரும் இம்மீதிகளை உறுதி செய்து கொள்ள எழுத்துமூல சான்றுகள் இல்லாததுடன் மேலும் கண்டறிந்து தேவையான சீராக்கம் செய்வதாக. | நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உரிய சான்றுகள் மூலம் உறுதி செய்ய வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) | 2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கூட்டுத் தொகை ரூபா 3,290,494 ஆன காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக உரிய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த தரப்பினரை எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும், 14 நாட்களில் வைப்புக்களை எடுக்காவிடின் குறித்த பணத்தை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக. | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,243,694 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 24,058,791 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| | ஏனைய வருமானங்கள் | | |
| (i) | மீளாய்வாண்டில் சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தியுள்ள 14 அறிவித்தல் பலகைகள் கட்டணம் செலுத்தாததால் கலற்றி அகற்றப்பட்டிருந்ததுடன், அவை தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 228,900 இனை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | பணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகள் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தில் உள்ளடங்கிய ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க நேர்ந்ததாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சபை அதிகார எல்லையில் காணப்படும் 16 தொலை தொடர்பு கோபுரங்களிலிருந்து மற்றும் 09 சிறிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய வியாபார கட்டணம் ரூபா 75,000 அறவிடப்பட்டு இருக்கவில்லை | அதிகார எல்லையிலுள்ள தொலை தொடர்பு கோபுரங்களிருந்து மற்றும் சிறிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பணம் கிடைக்காதது தொடர்பில் பின்னூட்டல் செய்ய தேவையாகவுள்ளதால் எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையூடாக குறித்த முன்னேற்றத்தை அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலைபேறான நோக்கங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஆளணியினரை | நிலைபேறான அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பாக பொது மக்களிற்கிடையில் நள்ள | எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து |

| | | |
|---|---|---|
| அறிவூட்ட 2020 ஜனவரி 21 முதல் 23 வரை மூன்று நாட்கள் தங்குமிட நிகழ்சித் திட்டமொன்றை திருகோணமலை சமுர்தி அமைச்சின் பயிற்சி மத்திய நிலையத்தில் நடாத்தியிருந்ததுடன், உணவு, தங்குமிடம், படகுப் பயணம் மற்றும் எரிபொருளிற்காக சமுகமளித்த நாற்பது அலுவளர்களிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 344,200 செலவிடப்பட்டிருந்தன. பயிற்சி நிகழ்சித் திட்டதிதை நடாத்தி ஓராண்டை கடந்திருந்த போதும், நிலைபேறான நோக்கங்கள் தொடர்பில் நீண்ட கால திட்டங்களை தயாரிக்க சபைக்கு இயலாதிருந்தது. | அபிப்பிராயத்தை ஏற்படுத்த மக்கள் பிரதிநிதிகளுக்கு அதன் எண்ணக்கரு மற்றும் நோக்கங்கள் தொடர்பாக ஆர்வத்தை ஏற்படுத்துவது இந்த நிகழ்சித் திட்டத்தை ஏற்பாடு செய்ததன் பிரதான நோக்கமாகும். எதிர்காலத்தில் சபையினால் தேசிய கொள்கைகலிற்கு இணங்க கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை தொடர்பான திட்டமிடலின் போது இப் பயணத்தினூடாக பெற்றுக் கொண்ட அறிவை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | கொள்ளக்கூடிய வகையில் பயிற்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் செலவு மேற்கொள்ளல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கழிவுப் பொருட்களை சேர்த்து வைப்பதற்காக வீடுகளிற்கு விநியோகிக்கும் நோக்கில் 2019 ஒக்டோபர் 10 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 280,870 பெறுமதியான 1000 குப்பை பாத்திரங்களில் ரூபா 207,844 பெறுமதியான 740 பாத்திரங்கள் 2021 மே அளவிலும் விநியோகிக்காது சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன. | குப்பை பாத்திரங்களை ஒரு மாதத்தினுள் விநியோகிகுமாறு விடய பொறுப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக. | குறித்த குப்பை பாத்திரங்களை நோக்கத்துடனான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த துரிதமாக செயற்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 1380 மெட்டிக் டொன் அளவான திண்ம கழிவுப் பொறகளை வெளியிட ரூபா 1,845,505 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 03 ஆளணி ஊழியர்களும் 01 வாகனம் மற்றும் இயந்திரமும் பயன்படுத்தப்பட்டிருந்தன. சபையிடம் முறையான கழிவுப் பொருள் முகாமை முறைமையொன்று இல்லாததால் உக்கலடையும் கழிவுகளை ஒன்று திரட்டி இரத்தினபுரி மாநகர சபையின் கழிவுப் பொருள் கொட்டிலிற்று ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உக்கலடையா கழவுகள் ஒன்று திரட்டுவதை இடைநிறுத்தியிருந்தது. | தற்போது சபையின் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்துடன் இணைந்து கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதாகவும், தேசிய கொள்கைளுடன் தொடர்பான கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்தை செயற்படுத்த தேவையான அறிவு மற்றும் பயிற்சி தேவைப்பாட்டிற்கும் நிதி ஒதுக்கீட்டு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | தேசிய கொள்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |